விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 29 ஞாயிற்றுக்கிழமை (15.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 291

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வடக்கின் மோதல் சம்பவங்கள் ஜெனீவாப் பேச்சை பாதிக்காது

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் முகமாலை முன்னரங்கப் பகுதிகளில் இடம் பெற்று வரும் மோதல்கள் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள ஜெனீவாப் பேச்சுக்களை பாதிக்காது என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினுர் ஓமர்சன் இதனைத் தெரிவித்துள்ளார். (04 பக்கம் பார்க்க)

## தட்டாதெருவில் வைத்து குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருவில் இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணிக்கு தட்டாதெருவில் அமைந்துள்ள கராஜ் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கராஜ் உரிமையாளரான கஸ்தூரியார் வீதி சிவகுருநாதர் ஒழுங்கையைச் சேர்ந்த சதாசிவம் அனந்தசுரேஸ் (வயது 34) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ். பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

## பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு இன்று பெற்றோல் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அரச நிறுவனங்களில் கடமைபுரியும் பதவிநிலை உத்தியோகஸ்தர்களுக்கு எரிபொருள் விநியோக அட்டைக்கு இன்று பெற்றோல் வழங்கப்படவுள்ளது.

மோட்டார் சைக்கிளுக்கு 500 ரூபாவிற்கும் ,காருக்கு 1000 ரூபாவுக்கும் பெற்றோல் வழங்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக பதவி நிலை உத்தியோகஸ்தர்கள் தமது பதவி நிலை குறித்து தமது பிரதேச செயலகரிடம் உறுதிப்படுத்தவேண்டும்.

இதற்காக சகல பிரதேச செயலர்களும் தமது செயலகங்களில் இன்று சமுகமளித்திருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோல் வழங்கப்படவுள்ள எரிபொருள் நிலையங்களின் விபரம் வருமாறு, சுன்னாகம் ப.நோ. கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் உடுவில்,அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் மல்லாகம், (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோ மீது துப்பாக்கிச் சூடு மூன்று இளைஞர்கள் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் இனந்தெரியாதோர் மேற் கொண்ட துப்பாக்கித் தாக்குதலில் மூன்று இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வவு னியா சமலம்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் இருந்து நான்கு இளைஞர்களை ஏற்றிச் சென்ற ஆட்டோ ஒன்றை வழிமறித்த இனந்தெரியாதோர் அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரிப்பு

## ஹான்சன் பௌயரின் வருகை

சம்பவத்தில் கராஜ் உரிமையாளரான கஸ்தூரியார் வீதி சிவகுருநாதர் ஒழுங்கை

பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

# வடக்கு-கிழக்கு பிரிப்பு நாளை நீதிமன்ற தீர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு ,கிழக்கைப் பிரிக்கக்கோரி ஜே.வி.பி. தொடர்ந்த வழக்குத் தீர்ப்பு நாளை வழங்கப்படவுள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர,ஏ.எஸ்.எம்.புகாரி மற்றும் எல்.பி.வசந்த ஆகியோர் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

இந்த வழக்கை நீதிபதி சரத் என்.சில்வா நீதிபதிகள் நிகால் ஜயசிங்க,என்.கே.உதலகம ராஜா பெர்னான்டோ மற்றும் நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் விசாரித்து வருகின்றனர். வழக்கை விசாரித்த நீதிபதிகள் நாளை தீர்ப்பளிப்பதாகவும் தெரிவித்தனர். (ச)

# ஹான்சன் பௌயரின் வருகை குறித்து யப்பான் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கைக்கு யப்பானிய சிறப்புத்தூதுவர் யசூசி அகாஷி வரும் காலத்தில் நோர்வேயின் சிறப்புத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரும் வருகை தருவது குறித்து யப்பர்ன் அதிருப்தி அடைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

யசூசி அகாஷியின் பயணத்தின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் ஜோன் ஹான்சன் பௌரின் வருகை அமையும் என்று யப்பான் கருதுவதாகவும் தெரிகிறது.

எதிர்வரும் ஒக்டோபர் 28 மற்றும் 29 ஆகிய திக்திகளில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பில் ஆலோசனை நடத்த ஜோன் ஹான்சன் பௌயர் இன்று இலங்கை வருகை தருகிறார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளை முடிபுக்கு கொண்டுவர இந்தியா-பின்லாந்து வேண்டுகோள்

(புதுடில்லி)

இலங்கை வன்முறைகளை முடிபுக்குக் கொண்டுவர வேண்டுமென்று இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் பின்லாந்து பயணத்தில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

பின்லாந்து பிரதமர் மத்தி வன்கெனன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தலைவர்களை கடந்த வியாழக்கிழமை மன்மோகன் சிங் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்புக்களின் பின்னர் இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில்;

இலங்கையில் இரு தரப்பினரும் பிரச்சினைகளுக்கு வன்முறை பதில் இல்லை என்பதை ஏற்று பேச்சுக்களுக்கு உடனடியாக திரும்பவேண்டும்.

அண்மைய மாதங்களில் வன்முறைகளால் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கில் 2 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

தற்போதைய போர் நடவடிக்கைகளால் பாரிய உயிரிழப்பு மற்றும் ஆயிரக்கணக்கானோர் இடப்பெயர்வு, இந்தியாவுக்கு அகதிகளாகச்செல்லுதல் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி முதல் இதுவரை மொத்தம் (04 ஆம் பக்கம் பார்க்க)

# யசூசி அகாஷி இன்று வருகிறார்

(கொழும்பு)

யப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாசி இன்று இலங்கை வருகிறார். அகாசியின் இலங்கை விஜயத்தின்போது அரச-விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடுவார் என யப்பான் தூதரகம் அறிவித்துள்ளது.

சமாதான நடவடிக்கைகள் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான யப்பானின் விசேட பிரதிநிதியாக யசூஷி அகாசி நியமிக்கப்பட்ட பின்னர் அவர் இலங்கைக்கு வரும் 13 வது பயணம் இதுவென்பது குறிப் பிடத்தக்கது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஒரு கிலோ வெள்ளைப்பூடு 2 ஆயிரத்தைத் தாண்டியது

யாழ்.குடாநாட்டில் உப உணவுப் பொருள்களும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படும் வாசனைத் திரவியங்கள் உட்பட பல பொருள்களின் விலைகள் உச்ச நிலை அடைந்துள்ளன.

குடாநாட்டில் ஏ-9வீதி மூடப்பட்டு 70 நாட்களைத் தாண்டிவிட்ட நிலையில் இன்னமும் பல பொருள்கள் மக்களின் கைக்கு எட்ட முடியாமலுள்ளன.

50கிராம் வெள்ளைப்பூடு, இஞ்சி போன்றவை 100ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன. அதைப் பெறுவதற்கும் முடியாத நிலை.

தேங்காய் ஒன்று 60 ரூபாவரை விலை போகிறது. அத்துடன் உப்பு,தீப்பெட்டி, சவர்க்காரம், மெழுகுதிரி, நுளம்புத்திரி போன்ற பாவனைப் பொருள்களின் விலைகளும் பல மடங்கு அதிகரித்த விலையில் விற்கப்படுகின்றன.

குடாநாட்டில் பல பெரு மழைபெய்த பின்னர் நுளம்பின் பெருக்கம் அதிகரித்து விட்டது. இதன் காரணமாக நுளம்புத்திரிக்கு கேள்வி அதிகரித்துள்ளது. எனினும் நேற்று நுளம்புத் திரியைப் பெறமுடியாதிருந்தது.

இதேவேளை பூடு,மெழுகுதிரி, மீன்ரின், பயறு போன்ற பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் சில சங்கங்களில் இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ரி.ஆர்.ஓவின் வங்கிக் கணக்குகள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் தொடர்பான விசாரணைகளை இரகசியப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் சர்வதேச பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டுள்ளதாகக் கொழும்புச் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பெயரில் இலங்கையிலுள்ள வங்கிக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. இந்நிதிகள் கடந்த காலத்தில் எவ்வாறு கையாளப்பட்டன என்பது குறித்து விசாரணைகள் மேற் கொள்ளப்படும்.

வடக்குக் கிழக்கு மக்களின் நல்வாழ்வுக்காக நிதி சேகரிப்பதாகக் கூறி கொண்டு உலகின் பல நாடுகளில் இவ்வமைப்பு பெருந் தொகையான நிதியைத் திரட்டியுள்ளமை தெரியவந்துள்ளது.

அத்துடன் வட கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் வழங்கிய நிவாரண நிதியும் இந்த வங்கிக் கணக்கிலேயே பதியப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு இலங்கையில் உள்ள வங்கிகளில் 163 கணக்குகள் இருப்பதாகத் தெரியவந்ததையடுத்து இது தொடர்பான விரிவான விசாரணைக்ளை மேற்கொள்ள விசேட இரகசிய பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# ஐ.நா. பொதுச் செயலாளர் முறைப்படி அறிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் எட்டாவது பொதுச் செயலாளராக தென்கொரிய வெளியுறவு அமைச்சர் பான்ஸ்கி மூன் முறைப்படி தேர்வு செய்யப்பட்டார்.

192 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பொதுச் சபை ஒருமனதாக இந்த முடிபை எடுத்தது. புதிய பொதுச் செயலாளராக பான்ஸ்கி மூன் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி பதவியேற்கவுள்ளார்.

ஐ.நா.சபையின் பொதுச் செயலாளராகவிருக்கும் கொபி அனானின் பதவிக் காலம் இவ்வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிபுக்கு வருகின்றது.

அவர் கடந்த 10 ஆண்டுகளாக இப்பதவியிலிருந்து வருகின்றார். புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முன்னோடித் தேர்தல் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நடந்தது.

இதில் இந்திய வேட்பாளர் சசிதருர் உட்பட பலர் போட்டியிட்டனர். அவர்கள் அனைவரையும் பின்தள்ளி விட்டு தென்கொரியாவின் வெளியுறவு அமைச்சர் பான்ஸ்கி மூன் வெற்றி பெற்றார்.

62 வயது நிறைந்த பான்ஸ்கி மூன் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். 1970



ஆம் ஆண்டு வெளியுறவுத் துறையில் பணியாற்ற ஆரம்பித்தார்.

தென்கொரிய வெளியுறவு அமைச்சராக கடந்த 2004 ஆம் ஆண்டுபொறுப்பேற்றார். தனது வெளியுறவுப் பணியைஅவர் டில்லியில்தான் முதன்முதலில் ஆரம்பித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# போருக்கு எதிரான பேரணிக்கு மன்னார் நகரில் அனுமதி மறுப்பு

அரசும் விடுதலைப்புலிகளும் போர் நடவடிக்கைகளை நிறுத்தி திட்டமிட்டவாறு 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியும் நேற்று சனிக்கிழமை போருக்கு எதிரான தேசிய முன்னணியினால் மன்னார் நகரில் நடத்தப்படவிருந்த மாபெரும் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் இப் பேரணி மன்னார் விளையாட்டு அரங்குச் சந்தியிலிருந்து.சுமார் 150 யார் தூரமுள்ள கூட்டம் இடம்பெற்ற புனித மரியாள் ஆலய வளாகம் வரையே இடம் பெற்றது.

கூட்டத்தில் முக்கிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது ஆட்கடத்தல், கொலைகள், கொலை மிரட்டல், கப்பம் கோருதல் போன்ற அனைத்து பாதகச் செயல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆட்கடத்தல், கொலைகள், பாலியல் வல்லுறவு, காணாமல் போதல் போன்ற அனைத்துக் குற்றங்களும் சர்வதேச விசாரணைக் குழுவினால் விசாரிக்கப்பட வேண்டும், யுத்தம் வேண்டாம், சமாதானமே வேண்டும் என்ற முக்கிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன. (ச)


## சிறு விளம்பரம்

காணவில்லை (அடையாள அட்டை)

திருஞானசம்பந்தர் விமலதாஸ், தனங்கிளப்பு சாவகச்சேரி. N.I.C. No. 841791894V சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் கடந்த 13 ஆம் திகதியன்று தேசிய அடையாள அட்டையுடன் விசேட அடையாள அட்டை, வலம்புரி பத்திரிகை அடையாள அட்டையுடன் கூடிய பேர்ஸ் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி அம்பிகா மருந்தகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C.475)


# இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் இன்று காலை 9 மணிக்கு யாழ்.அடைக்கல அன்னை தேவாலயத்தில் (ஓ.எல்.ஆர்.)நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை தீவக அரிமாக் கழகம் மேற்கொண்டுள்ளது. (ச)

# க.பொ.த. உயர் தர பரீட்சைப் பெறுபேறுகள்

*வேலணை மத்திய கல்லூரி*

கலைப்பிரிவு

க.டர்சினி 3ஏ, வி.துஷாயினி 2ஏ பி, இ.தர்சினி 2ஏ பி, க.தேவபாலன் 2ஏ சி, மா.நிவேதிகா 3பி, வ.ஜிமித்திரா 2பி சி, ஞா.தாரணி 2பி சி, த.ஜனார்த்தனி 2பி சி, வி.பகீரதன் 2பி சி.

வர்த்தகப் பிரிவு

கி.வினோதன் ஏ 2பி, ர.உதயன் ஏ 2சி.

*பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி*

உயிரியல் பிரிவு

எம்.கோபிஷான் 3ஏ, ஜி.பிரதீபன் 3ஏ, எஸ்.சாரங்கன் 3ஏ, எஸ்.பிரசாந் 3ஏ, வி.இந்துஜன் 2ஏ பி, வி.சிவதர்ஷன் 2ஏ பி, ரி.ஜெயதர்ஷன் 2ஏ பி.

கணிதப் பிரிவு

ஆர்.இராகுலன் 2ஏ பி,பி.இராகலன் 2ஏ பி.

வர்த்தகப் பிரிவு

வி.ஐங்கரன் 3ஏ, ஆர்.நிலாவாணன் 3ஏ, டி.கௌதுமன் 2ஏ பி, த.ஆதித்தன் 2ஏ பி, எஸ்.சிவசொரூபன் ஏ 2பி.

கலைப்பிரிவு

ஆர்.ராக்ஷன் 3ஏ, ஆர்.பிரவணன் 3ஏ, ஆர்.நிரோஜன் 2ஏ பி, ஜே.திருவரங்கன் 2ஏ பி, எஸ்.ஜெயகணேஷ் 2ஏ பி.

*பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை*

கலைப்பிரிவு

தே.நித்தியா 3ஏ, ஜெ.கஜேந்தினி 2ஏ பி, ந.வதனரோஜா 2ஏ பி, சி.புவனேஸ்வரி 2ஏ பி, அ.சுதர்ஷனா 2ஏ பி,த.கிரியா ஏ 2பி, வை.நிலானி ஏ 2பி, பா.நிவேதனா ஏ 2பி,கு.கோபிகா ஏ 2பி, வே.கலைப்பிரியா 2ஏ சி, இ.தர்ஷிகா 2ஏ எஸ்.

வர்த்தகப் பிரிவு

மோ.யோகினி 2ஏ பி, அ.சிந்துஜா 2ஏ பி, அ.ரெஜினா 2ஏ பி.

உயிரியல் பிரிவு

பி.சோபனாமேரி ஏ பி சி, கு.பிறேமலதா 3பி.

*கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி*

விஞ்ஞானப் பிரிவு

அ.அனுதீபா ஏ பி சி.

வர்த்தகப் பிரிவு

கை.திருக்குமரன் 3ஏ.

கணிதப் பிரிவு

கு.ஆன்தர்ஷிகா 2பி சி, ஆ.துஷ்யந்தன் பி 2சி, த.சுகந்தன் 3சி.

கலைப் பிரிவு

மு.மயூரிகா ஏ 2பி, க.இளவரசன் ஏ 2பி, சோ.வருணா ஏ 2பி, ச.நளினி ஏ 2பி, சூ.சூரியகீர்த்தனா ஏ 2பி, சி.ரவிசாந் ஏ பி சி,யோ.வித்தியா ஏ பி சி, யோ.கோபிகா ஏ பி சி, ந.ரஜீவன் ஏ பி எஸ், கு.பிரதீபா ஏ பி எஸ், இ.விஜயதரன் ஏ 2சி, க.அனுஜா ஏ.2சி, ந.தர்ஜிதா ஏ 2சி, செ.ஊர்மிளா ஏ 2சி, இ.கீர்த்தனா ஏ சி எஸ்,வி.மயூரி ஏ சி எஸ்,தி.தாரகா ஏ சி எஸ், ந.ரஜித்தா ஏ சி எஸ்.

*சாவகச்சேரி இந்துக் கல்லூரி*

கணிதப் பிரிவு

கா.காந்தபாலன் 3ஏ, சி.அபர்னா 3ஏ,சி.மயூரன் 2ஏ பி, ர.கோபிராம் 2ஏ பி, பிரதாபன் ஏ 2பி, ஜெ.ரமணன் ஏ 2பி, ச.கனராஜன் ஏ 2பி, தே.ஜெகரன் ஏ 2சி, க.கர்ஷன் 2பி சி, ஜ.ரஜீவன் 2பி சி, தே.செந்தூரன் 2பி சி, இ.சசிலன் 2பி சி.

உயிரியல் பிரிவு

த.ஜெயசுந்தர் 3ஏ, க.சசிமாறன் 3பி, த.செந்தூரன் 3பி, அ.குமுதா 2பி சி.

வர்த்தகப் பிரிவு

வ.ஞானவரதன் 3ஏ, ந.வேணுகா 2ஏ பி, யோ.அர்சுனன் 2ஏ சி, அ.ஸ்ரீரூபி ஏ 2பி.

கலைப் பிரிவு

சி.பானுசிறி 3ஏ, ந.கஸ்த்திகா 3ஏ, ந.கபில்ராஜ் 2ஏ பி, பொ.பாரதி 2ஏ பி, கே.கபிலரூபா 2ஏ பி, கு.அம்பிகை 2ஏ பி, ம.சுபத்திரா 2ஏ பி;, தி.கோபிநாத் 2ஏ சி, ஜெ.சகிர்தா 2ஏ சி, இ.ரஞ்சிதா 2ஏ சி,கோ.மகுடபதி ஏ 2பி, தி.கௌசிகா ஏ 2பி. (ச-5,35,133)

# வடமராட்சியில் பாணுக்குத் தட்டுப்பாடு

(துன்னாலை)

வடமராட்சியில் பாணுக்குத் தட்டுப்பாடு நிலவுதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பேக்கரிகளுக்கு போதிய மா வழங்கப் படாமையினால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

அங்குள்ள பேக்கரிகளில் காலையிலும் மாலையிலும் நீண்ட வரிசையில் மக்கள் கூட்டம் காணப்படுகின்றது. இதேவேளை வடமராட்சியில் சில கடைகளில் பாண் 30 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

மிகுதிப் பணத்தை வழங்க சில்லறைக் காசு இல்லை எனத் தெரிவிப்பதாகவும் கூறப்பட்டது. பாணுக்கான தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு மக்கள் மிகுதிப் பணத்தைப் பெற முயற்சிப்பதில்லை எனவும் கூறப்பட்டது. (ச-101)

# நூலகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையினால் நூலகக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி கொக்குவில் உப அலுவலக கேட்போர் கூடத்தில் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதேவேளை நல்லூர் பிரதேச சபைக்கு நூல்களைக் கையளிக்க விரும்புபவர்கள் நேரடியாக நூல்களைக் கையளிக்கலாம் என நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளர் பொ.வைரமுத்து அறிவித்துள்ளார். (ச)

# மகளூவின் அதிரடிப் பந்து வீச்சில் நிலைகுலைந்தது மேற்கிந்திய அணி

மினி உலகக் கிண்ணத் தொடரின் தகுதிச்சுற்றுப் போட்டியில் மகரூவின் துல்லியமான பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 9 விக்கெட்டுக்களால் இலங்கை அணி அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி மற்றும்இலங்கை அணிகளுக்கிடையிலான தகுதிச்சுற்றுப் போட்டியின் இறுதி போட்டி நேற்று மும்பையில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி மகரூவின் துல்லியமான பந்துவீச்சினால் 30.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் வேவ ஹைன்ஸ் 28 ஓட்டங்களையும் அணித் தலைவர் பிறைன் லாரா 13 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் 10 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

உதிரிகளாக 17 ஓட்டங்களை இலங்கை அணி வழங்கியது. பந்து வீச்சில் பர்வேஸ் மகரூப் 9 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களை மாத்திரம் வழங்கி 6 விக்கெட்டுக்களை வீழ்த்திய அதேவேளை,

சமிந்தவாஸ்,ஜெசித்த மலிங்க ஆகியோர் தலா இரண்டுவிக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 81 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி முதல் பந்து வீச்சிலேயே நம்பிக்கை நட்சத்திரமான தரங்காவை இழந்த போதிலும் சனத்ஜெயசூர்ய , அணித்தலைவர் மகல ஜெயவர்த்தன பிரிக்க முடியாத இணைப்பாட்டத்தினால் 13.2 ஓவர்களில் 83 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதேவேளை துடுப்பாட்டத்தில் சனத்ஜெயசூர்ய 45 ஓட்டங்களையும் மஹெல ஜெயவர்த்தன 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்ப்பாக எட்வோட்ஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இந்த வெற்றியுடன் இலங்கை அணி தகுதிச்சுற்றில் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று மினி உலகக் கிண்ணத் தொடரின் லீக் சுற்றில் பிரிவு பியைச் சேர்ந்த தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் மற்றும் நியூஸ்லாந்து அணிகளுடன் மோதுகின்றது.

இப்போட்டியில் தோல்வியடைந்த பிரிவு ஏயைச் சேர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுடன் மோதுகின்றது.

இதேவேளை இன்று லீக் சுற்றின் முதலாவது போட்டியில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. (ச-5)

எல்லோரும் ஏறி இழைத்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தாராம்.

-தமிழ்ப் பழமொழி

வலம்புரி

# விஷமப் பிரசாரங்களை கலைக்கும் முகமாலைத் தாக்குதல்

முகமாலையில் இடம்பெற்ற தாக்குதலுக்குப் பின்னர் தென்னிலங்கையில் பரவலான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இத்தகைய கருத்துக்கள், அரசியல் வட்டாரங்களிலும் இராணுவத் தரப்புகளிலும் வெளிவருவது வழமையானதாயினும், கடந்த பதினொராம் திகதி முகமாலையின் முன்னரங்கப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற தாக்குதலுக்குப் பின்னர் தென்னிலங்கையில் வெளியிடப்படும் கருத்துக்கள், உண்மை நிலையினை மக்களுக்கு வெளிப்படுத்துவனவாகவுள்ளன.

'தாக்குதல் திட்டத்தின் தவறே தோல்விக்கான முக்கிய காரணம்' என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக்க கூறியுள்ளார்.

தாக்குதல் குறித்து வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட ஹரி குணதிலக்க,

அண்மைக் காலமாக இடம்பெற்ற தாக்குதல்களில் விடுதலைப்புலிகளுக்கு பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு படைத்தரப்பு செயற்பட முனைந்தமையே தோல்விக்கான காரணம் என்றும் கூறியுள்ளார்.

இலங்கை விமானப் படையின் தளபதியாகவிருந்த ஒருவர் விடுதலைப்புலிகளின் பலத்தை மீள் பரிசீலனை செய்துள்ளார்.

அதாவது விடுதலைப்புலிகளின் பலம் குன்றி விட்டது. படையினர் தாக்குதலை ஆரம்பித்தால் வெற்றி அவர்களுக்கே என்றவாறு தென்னிலங்கையிலுள்ள இனவாத ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இவை, வேண்டுமென்றே செய்யப்பட்டவை.

இராணுவத்தின் மனோபலத்தை அதிகரிப்பது தமிழர்களுக்கெதிரான போரை ஆரம்பிப்பது, என்பவற்றை இலக்காகக் கொண்ட இனவாத ஊடகங்கள் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் தாக்குதல்களில் விடுதலைப்புலிகள் கடும் இழப்புக்களைச் சந்தித்து வருவதாக செய்தி வெளியிட்டனர்.

உண்மை நிலை தெரிந்திருந்தும் செய்தி ஊடகங்களின் போலி விமர்சனத்தை நம்பியதே படைத்தரப்புக்கு ஏற்பட்ட பேரிழப்புக்குக் காரணம் என்பது ஹரி குணதிலக்கவின் முடிபு.

அவரின் முடிபோடு சிங்கள மக்களும் ஆட்சியாளர்களும் ஓர் முடிபுக்கு வந்திருப்பர். அதாவது, போர் தொடுத்து விடுதலைப்புலிகளை வெல்ல முடியாது என்பதே அதுவாகும்.

அதேநேரம் விடுதலைப்புலிகளின் படை பலம் குறித்து இராணுவத்தரப்புக் கொண்டிருந்த குறைவான மதிப்பீடே இராணுவத்தின் பின்னடைவுக்குக் காரணம் என சிங்கள ஊடகம் ஒன்றின் பாதுகாப்புத் தொடர்பான ஆய்வாளர் ஒருவரும் கூறியுள்ளார்.

அவ்வகையில் முகமாலையில் நடந்த கடும் சமர், அரசின் விஷமத்தனமான பிரசாரங்களை உடைத்தெறிந்ததுடன் சமாதானத்தின் தேவைப்பாட்டையும் வலியுறுத்தியுள்ளது.

எதுவாயினும் ஆட்சிக்கு வருகின்ற புதியவர்கள் ஒரு தடைவையேனும் விடுதலைப்புலிகளுடன் போர் தொடுத்து வெற்றியீட்ட வேண்டும் என விரும்பி சறுக்கி விழுவது வழக்கம்.

அந்த வகையில் புதிய சக்கடத்தாரும் சறுக்கி விழுந்தார் என்று கூறிகொள்ளலாமல்லவா?

# இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றம்!

## தயா மாஸ்டர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பேச்சுவார்த்தைக்கான திகதி, இடம் என்பன தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் படையினர் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் நேற்றுத் தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை மதித்துப் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளோம். ஆனால் இலங்கை அரசில் எதுவித நம்பிக்கையும் எமது மக்களுக்கோ அல்லது விடுதலைப்புலிகளுக்கோ கிடையாது.

படையினரும் அரசும் பேச்சுவார்த்தைக்கு தயார்என்று கூறிக்கொண்டு பாரிய படை நடவடிக்கைகளை தமிழர் தாயகம் மீது கட்டவிழ்த்து விட்டு வருகின்றன.

இந்த நிலையில் யுத்த விமானங்கள் தலைகளுக்கு மேலால் பறக்கின்றபோது எப்படி இயல்பாகப் பேச முடியும். இனிமேலும் படையினரின் நடவடிக்கைகள் தொடர்ந்தால் எமது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி கிளிநொச்சிக்கு வரும் நோர்வே



சிறப்புத் தூதுவரிடம் எமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவோம் என்றார் தயாமாஸ்டர். (ச)

# படையினர் மீதான தாக்குதல்களை தயவு செய்து நிறுத்திக் கொள்ளுங்கள்

## பிரதமர் ரட்ணசிறி உரை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கின்ற இவ்வேளையில் விடுதலைப்புலிகள் படையினர் மீது கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அரசாங்க படையினர் மீது மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களை தயவு செய்து நிறுத்துங்கள். இல்லையேல் தரை மற்றும் வான்வழிகளில் தாக்குதல் நடத்துவோம் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கரமநாயக்க தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் கொடுத்து தாய்நாட்டை காப்பாற்ற வேண்டிய காலம் கனிந்து விட்டது என்பதனால் தேசத்தைப் பாதுகாப்பதற்காக சகல கட்சிகளையும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு பகிரங்கமாக அழைப்பு விடுகின்றோம் என்றார்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள ஹொரனை தேர்தல் தொகுதியில் சிறுவர்களுக்கான சேமிப்புத் திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் அங்கு நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக தீர்வு காண்பதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றபோது விடுதலைப்புலிகள் படையினர் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். எம்மைத் தாக்குகின்றபோதெல்லாம் நாங்கள்கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்க முடியாது. எதற்கும் ஓர் வரையறை இருக்கின்றது. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. வரையறை மீறப்படும்போது எம்மால் சும்மா இருக்க முடியாது.

கடந்த சில தினங்களாகவே முகமாலைப் பகுதியில் படையினர் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதல் தொடர்ந்தால் தரைவழித் தாக்குதல்கள் மட்டுமல்லாது வான்வழித் தாக்குதல்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதால் தற்போதைய தாக்குதல்களை தயவு செய்து நிறுத்திக் கொள்ளுங்கள் என்றார் அவர்.

யுத்தம் எமக்குத் தேவையில்லை. அதனூடாக இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வு காண இயலாது என்பதை அறிந்து வைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் தாக்குதல்களை மேற்கொள்வதும் பதில் தாக்குதல்களை மேற்கொள்வதும் ஆரோக்கியமற்ற சூழலையே உருவாக்கும் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பேச்சுக்களே சிறந்த தீர்வு

## பிரிட்டன் தெரிவிப்பு

(லண்டன்)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேச்சுக்கள் நடைபெறுவதே தீர்வாகும் என பிரிட்டன் தெரிவித்துள்ளது. இலங்கை நிலைமைகள் குறித்து இங்கிலாந்து அரசாங்கத்தின் அறிக்கையை அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மார்க்ரெட் பெக்கெட் வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது; கடந்த 2005 ஆம் ஆண்டு ஜூன் முதல் 2006 ஆம் ஆண்டு வரை மொத்தம் 900 வரையிலான பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் பொதுமக்கள்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மனித உரிமைகளை மீறியுள்ளனர். ஜெனீவாவில் பெப்ரவரியில் நடந்த பேச்சுக்களில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்கள் உள்ளிட்டவைகளை இரு தரப்பும் செயற்படுத்தவில்லை என்கிற இணைத் தலைமை நாடுகளின் கருத்தை இங்கிலாந்து அரசாங்கமும் ஆமோதிக்கிறது.

இராணுவத்திற்கும் துணை இராணுவக் குழுவினருக்கும் இடையேயான தொடர்புக்கு சாத்தியங்கள் உள்ளன. அரசாங்கம் இதனைத் தடுக்கவில்லை. தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதக் குழுக்கள் இயங்குவதைத் தடுப்பதாக அது வாக்குறுதி அளித்திருந்தும் செயற்படுத்தவில்லை.

இதே காலகட்டத்தில் இராணுவத்தினருக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதல்களும் கணிசமான அளவில் அதிகரித்திருக்கின்றன. இலங்கையின் மனித உரிமைகளைத் தொடர்ந்து இங்கிலாந்து கண்காணிக்கும்.

எம்மைப் பொறுத்தவரை பேச்சுக்கள்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பாதையாகவிருக்கும். பேச்சுக்களின் மூலம் அனைத்துத் தரப்பு மக்களினது நீதியான முறைமைகளுக்குத் தீர்வு காணமுடியும்.

மனித உரிமைகள் மீறல்கள்தொடர்பில் வெளிப்படையான நம்பிக்கையான விசாரணைகளை அரசாங்கம் நடத்த வேண்டும் என்று அந்தஅறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச)

# முகமாலைக்குச் செல்ல அனுமதிக்குமாறு கண்காணிப்புக்குழு அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

மோதல்கள் நடைபெற்ற முகமாலை மற்றும் நாகர்கோவில் பகுதிகளுக்குச் சென்று மோதல் தொடர்பான உண்மை நிலையை அறிந்து சுயாதீனமான அறிக்கையை தயாரிக்க தமக்கு அனுமதி வழங்குமாறு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு இருதரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கான சாதகமான பதிலை தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளபோதும் அரசாங்கத்திடமிருந்து இதற்கான அனுமதி கிடைக்கவில்லை எனவும் அக்குழு தெரிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ள நிலையில் இருதரப்பினரும் மோதல்களை நிறுத்த வேண்டும்என தாம் கோரியுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்தார்.

மோதல்கள் நடைபெற்ற முகமாலை மற்றும் நாகர்கோவில் பகுதிகளுக்குச் செல்வதே தமது நோக்கம் எனவும் தெரிவித்த அவர்; அங்கு சென்று உண்மை நிலையை ஆராய்ந்து சுயாதீன அறிக்கை ஒன்றை வெளியிட இருதரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர்கூறினார். (ச-5)

# தமிழ்மக்களுக்கு எதிரான குழுவிடம் இந்தியப்பிரதமர் சிக்கியுள்ளார்

## இந்திய ஆங்கில நாளிதழ் சாடல்

(இந்தியா)

இலங்கை இனப்பிரச்சினையை புரிந்து கொள்ள முடியாமல் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கேரளாவைச் சேர்ந்த மலையாளிகள் குழு ஒன்று இறுக்கிப்பிடித்திருப்பதாக பிரபல இந்திய ஆங்கில ஊடகமான திஸ் டேட்ஸ்மென் சாடியுள்ளது.

திஸ் டேட்ஸ்மென் நாளிதழின் பிரபல ஊடகவியலாளர் சாம் ராஜப்பா எழுதியுள்ள கட்டுரையின் தமிழ் வடிவச் சுருக்கம் வருமாறு;

தெற்காசியாவில் இலங்கை இராணுவமயமாக்கப்பட்ட ஒரு நாடாக உருவாகியுள்ளதாக அண்மையில் பெங்களூரைச்சேர்ந்த உத்திகளுக்கான அமைப்பு ஒன்றின் அறிக்கையில் அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தியா மற்றும் பாகிஸ்தானைவிட ஆயிரம் பேருக்கு எட்டு இராணுவத்தினர் என்கின்ற நிலை இலங்கையில் உள்ளது. தனது பொருளாதாரத்தில் 4.1 விழுக்காட்டை பாதுகாப்புக்கு இலங்கை ஒதுக்குகிறது. இந்தியாவோ 2.5 வீதம் ;பாகிஸ்தான் 3.5 வீதம் ஒதுக்குகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் எட்டு மில்லியன் டொலர் இராணுவ நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக அரசாங்கமானது ஒரு பில்லியன் டொலர் நிதியை ஒதுக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் மட்டும் தான் அச்சுறுத்தல் உள்ளது. 8 ஆயிரம் வலிமையான போராளிகளை பெற்றுள்ள விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முழுஅளவிலான வலுவான இராணுவத்தினரையும் 20 ஆயிரம் கடற்படையினரையும் இலங்கை கொண்டிருக்கின்றது.

இஸ்ரேலியத் தயாரிப்பான கிபீர், சுப்பர் சொனிக் விமானங்கள், மிக் -23 ,எம்.ஐ.-24 மற்றும் உலங்கு வானூர்திகளை விமானப்படை பெற்றுள்ளது.

இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் தமிழ் மக்களின் விடயங்களை புரிந்துகொள்ள முடியாத ஆலோசகர்கள் இறுக்கமான பிடியில் உள்ளார்.

திட்டமிடப்பட்டதோ அல்லது எதேச்சையானதோ பிரதமர் மன்மோகன்சிங்கின் முதன்மைச்செயலாளர் ,பாதுகாப்பு ஆலோசகர், இலங்கை விவகாரங்களைக் கையாளும் வெளிவிவகார இணை அமைச்சர் ,வெளிவிவகார செயலாளர் ,கொழும்பில் உள்ள இந்தியத்தூதுவர் ,றோ உள்ளிட்ட புலனாய்வு அமைப்புக்களின் தலைவர்களுமே மலையாளிகள்.

இவர்கள் அனைவருமே செம்மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கும் வாழும் மொழியாக தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான கடும்போக்கு உணர்வு கொண்டவர்கள்.

இந்தியாவின் நிலைப்பாட்டை தனக்கு சாதகமாக்கிக் கொண்ட இலங்கை, பாகிஸ்தானை அங்கு அனுமதித்துள்ளது.

பாகிஸ்தான் புலனாய்வு அமைப்பின் முன்னாள் இயக்குநரும் ஐ.எஸ்.ஐ.ஐ இயக்குபவருமான பசீர் வாலி மொகமட் இலங்கையின் முன்னாள் தூதுவராக பணியாற்றினார்.

அவருக்குப் பின்னர் பாகிஸ்தானின் விமானப்படையின் பிரதித்தளபதி ஏயர் வைஸ் மார்ஸல் செக்சத் அஸ்லம் சௌத்திரி அண்மையில் நியமிக்கப்பட்டார்.

பிரிவினவாதத்திற்கு எதிராக வான்வெளித் தாக்குதல்களில் நிபுணத்துவம் பெற்றர் அவர். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் இலங்கை மற்றும் பாகிஸ்தானிய இராணுவங்களுக்கிடையேயான இரகசியக் கூட்டுறவின் பின்னணியில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என அக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு

(துன்னாலை)

புலோலி குரும்பசிட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை 5 மணியளவில் சுடப்பட்டுள்ளார்.

வைரவர் ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக சென்ற வேளையிலேயே அவர் சூட்டிற்கு இலக்காகியதாக தெரிவிக்கப்பட்டது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் யோகராசா (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார்.

கையிலும், காலிலும் காயமடைந்த அவரை இராணுவத்தினர் அழைத்துச்சென்று சிகிச்சையளித்த பின் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்பட்டது. (சு-101)

## அரச பிரதிநிதிகளுக்கு இருநாள் கருத்தரங்கு

ஜெனீவாவில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் மிடையில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ள அரச தரப்பு பிரதிநிதிகளுக்கு 2 நாள் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சர்வகட்சி ஆலோசனைக்குழு தற்பொழுது முன்வைத்துள்ள ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெடுப்புக்கள் குறித்து அவர்களுக்கு விளக்கப்படவுள்ளது.

மக்களின் கருத்துக்கள், அரசியல் கட்சிகள் முன்வைத்த யோசனைகள் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துக்கள் என்பனவற்றை கவனத்தில் கொண்டு பேச்சுக்களை நடத்துவது குறித்து அவர்களுக்கு விளக்கப்படவுள்ளது. (சு)

## வன்முறைகளை முடிபுக்கு...

இந்தியாவுக்கு 15 ஆயிரம் அகதிகள் சென்றுள்ளனர். நோர்வேயின் அமைதி முயற்சிகளை இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் முழுமையாக ஆதரிக்கிறது.

இரு தரப்பு மோதல்களால் யுத்த நிறுத்தமானது சீர்குலைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு மீண்டும் கண்காணிப்புக்குழுவை பின்லாந்து அனுப்புமா என்ற கேள்விக்கு பதிலளித்த அந்நாட்டுப் பிரதமர் நேரடியாகப் பதிலளிக்காமல் இலங்கை விடயத்தில் ஆக்கபூர்வமான பங்களிப்பைச்செய்யும் என்று தெரிவித்துள்ளார். (சு-5)

## ஆட்டோ மீது...

சம்பவ இடத்தில் இருவர் உயிரிழந்தாக வும் காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவர்கள் மூவரும் தமது வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் வைத்திலிங்கம் மகேந்திரன், நடராசா தவராசா மற்றும் நவநீதன் ஆகிய மூன்று இளைஞர்களுமே கொல்லப்பட்டுள்ளனர்.

ரூபன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ஏ.கே ரகத்துப்பாக்கியின் வெற்றுத்தோட்டாக்கள் அதிகம் காணப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிவான் ம.இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார். (சு)

## ஹான்சன்...

இலங்கையில் யப்பானியத் தலையீட்டை வெளிப்படுத்துவதற்காக 13 ஆம் முறையாக யப்பானிய சிறப்புத்தூதுவர் யசூசி அகாஷி இன்று வருகிறார்.

இந்த இரு நாடுகளும் இணைத்தலைமைநாடுகள் அமைப்பில் இருந்தபோதும் இராஜதந்திர நிலைகளில் இந்த அதிருப்தி நிலவுவதாக கொழும்புச்செய்திகள் தெரிவித்துள்ளன. (சு)

## பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு...

செ.உதயகுமார் எரிபொருள் நிரப்பு நிலையம் சண்டிலிப்பாய் , பண்டத் தரிப்பு ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ,குகன் எரிபொருள் நிரப்பு நிலையம் திருநெல்வேலி,

ஜெயதேவா எரிபொருள் நிரப்பு நிலையம் திருநெல்வேலி ,மாக்பெட் எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ்ப்பாணம், அச்சுவேலி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம், நெல்லியடி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ,புலோலி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம்,

பருத்தித்துறை ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ,கைதடி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ,கொடிகாமம் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம், வேலணை ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிரப்பு நிலையம்.

எரிபொருள் விநியோக அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்கவில்லை எனில் அருகில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அட்டைக்குப் பெற்றோலைப் பெற்றுக்கொள்ளலாம். இதேவேளை ஏனையோருக்கான பெற்றோல் விநியோகம் சம்பந்தமாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (சு-5)

## வடக்கின் மோதல்...

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது;

வடக்கில் முகமாலை, கிளாலி மற்றும் நாகர்கோயில் பகுதிகளில் மோதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

எனினும் பேச்சுக்களில் பங்கேற்காதது குறித்து இரு தரப்பினரும் கருத்துக்கள் எதனையும் வெளியிடவில்லை.

இந்நிலையில் மோதல் சம்பவங்கள் பேச்சுக்களைப் பாதிக்காது என தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் லார்ஸ் ஜோஹான் சொல்பேர்க் இரு தரப்பினருடனான ஜெனீவாப் பேச்சில் கலந்துகொள்வார்.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே இம் மாதம் 28 ,29 ஆம் திகதிகளில் பேச்சுக்களை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதில் கலந்து கொள்வது குறித்த முடிபுகளை விடுதலைப்புலிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி தம்மைச் சந்திக்கும் நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரிடம் விடுதலைப் புலிகள் தெரிவிப்பார்கள் எனவும் அவர் கூறினார். மோதல்கள் தொடருமானால் சமாதானப் பேச்சுக்கள் பாதிப்படையுமென கண்காணிப் புக்குழுவின் பேச்சாளர் முன்னர் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இதேவேளை சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ள அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு)

COMPUTERIZED ACCOUNTING
Speed Batch Only 30 Hours
Start on :- 15.10.2006
Days :- Sat, Sun
Time :- 12.00 pm
Only For 10 Students
Fee :- 2000/=
கணக்கியல் அறிவில்லாதவர்களும் இணைந்து பயிற்சி பெற முடியும்.
பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers மற்றும் Banking Professionals ஆல் நடத்தப்படும்
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

BIT Bachelor of Information Technology
Special Classes
Bit கற்கைநெறிக்கான Semester I ற்குரிய விசேட விரிவுரைகள் ஆரம்பம்.
Fundamentals of Programming
Systems Analysis & Design
பயிற்சிகள் யாவும் Qualified & Experienced Lecturers ஆல் நடாத்தப்படும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்!
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

நாளை ஆரம்பம்
DAY CLASS
வர்த்தகப் பிரிவு
காலை 8 மணி
DMI
Jaffna
(C-477)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.